RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2148

OPEN ACCESS

# பெரியபுராணம் காட்டும் மகளிர் நிலை

பா. தன்ராஜ் [அ, *], எ. கற்பகம் [அ]

[அ] தமிழாய்வுத்துறை, அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கரூர்-639005, தமிழ்நாடு, இந்தியா.

# Status of Women in Periyapuranam

B. Dhanraj [a, *], E. Karpagam [a]

[a] Research Department of Tamil, Government Arts College (Autonomous), Karur-639005, Tamil Nadu, India

* Corresponding Author: dhanrajb5696@gmail.com

Received: 28-08-2022
Revised: 30-09-2022
Accepted: 07-10-2022
Published: 15-11-2022

Check for updates

## ABSTRACT

Periyapuranam is considered to be the twelfth book of the twelve Thirumurai. Periyapuranam is composed by Chekilar. It is a historical repository that tells about sixty-three Nayanmars and nine Thogaiadiyars who lived in different regions. In the world there are living organisms ranging from first sense to sixth sense. Among them human beings who have six senses occupy the first position. Women are considered to be the best among men. Motherhood has its own specialities in the world. This article about such women who are described in Periyapuranam. Periyapuranam explains the specialities of various women like Isainianiyar, Karaikal Ammaiyar, Mangaiyarkarasiyar, Thilakavathiyar, Tiruvenkattu Nangai, wife of Iyarpakai Nayanar, wife of Ilayankudi Maaran Nayanar, wife of Thiruneelakanda Nayanar and wife of Appoothiadigal. This article explains only about foure women characters. They are Isainianiyar, Karaikal Ammaiyar, Mangaiyarkarasiyar and Thilakavathiyar. From Karaikal Ammaiyar, we can know that women can be superior to men in terms of devotion. Karaikal Ammaiyar, has the privilege of being called by the Lord Himself as Mother and who has attained the supreme position of standing forever under the Lord's feet. Mangaiyarkarasiyar, whose real name was Maani, was the queen of all the Mangaiyars (Women). Mangaiyarkarasi made Saivism flourish and made women feel heroic, who sacrificed her life for her younger brother. Tilakavathiyar is a person who changed her entire life for his family. Through Tilakavathiyar, Chekilar conveys the idea that a woman dedicates her entire life to her family, and that women should be given higher position in the country. This article conveys the idea that despite focussing on the risks and problems faced by women, they should be appreciated. This article brings out the opinion that women should be praised as that how they were praised in Periyapuranam.

**Keywords:** Periyapuranam, Nayanmar, God, Worship

## முன்னுரை

சைவ சமயத் திருமுறைகளில் பன்னிரண்டாம் திருமுறையாகப் போற்றப்படுவது பெரியபுராணம். சிவனடியார்களான நாயன்மார்கள் அறுபத்து மூவர் பற்றியும், தொகையடியார்கள் ஒன்பது பேர் பற்றியும் சிறப்பாகக் கூறுவது பெரியபுராணம் ஆகும். அடியவர்களின் வரலாற்றை எடுத்துக் கூறும் மாக்கதை. இந்நூலில் பெண் அடியார்கள் பற்றியும், அடியார்களுக்கு உதவி புரிந்த பெண்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளது. பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ள மகளிரின் நிலையை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## பெரியபுராணம்

சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தும் நூல்களுள் பெரியபுராணம் முக்கியப்பங்கு வகிக்கிறது. பல்வேறு ஊர்களில் வாழ்ந்த பல்வேறு வகையான இனத்தைச் சார்ந்த அடியார்களின் பெருமைகளைச் சிறப்பாக எடுத்துரைக்கும் காப்பியமாகத் திகழ்கிறது. திருவழுந்தூரில் பிறந்த இராமதேவர் என்ற இயற்பெயரைக் கொண்ட சேக்கிழார் பெருமானால் படைக்கப்பட்டது பெரியபுராணம். பெரியபுராணத்தில் 4287 பாடல்களும், 13 சருக்கங்களும், இரண்டு காண்டங்களும் உள்ளன. 'உலகெலாம்' எனத் தில்லை சிவபெருமான் அடியெடுத்துக் கொடுக்க அதனையே முதலாகக் கொண்டு ஓராண்டில் பெரியபுராணத்தை எழுதி முடித்தார் சேக்கிழார்.

## பெரியபுராணத்தில் மகளிர்

சைவ அடியார்களுள் பெரும்பாலானோர் ஆண்களாகவே உள்ளனர். இருப்பினும் பெண் அடியார்கள் பற்றியும், அடியார்களுக்குத் தொண்டு செய்த பெண்கள் பற்றியும் பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ளது.

"பெரியபுராணத்தில் மூன்று பெண் நாயன்மார்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இசைஞானியார்,

காரைக்கால் அம்மையார்,

மங்கையர்க்கரசியார்".

ஆகியோர் ஆவர். இவர்களோடு மொத்தம் முப்பத்து நான்கு பெண்கள் பற்றி பெரியபுராணம் குறிப்பிடுகின்றது.

"திலகவதியார்,

திருவெண்காட்டு நங்கை (சிறுத்தொண்டரின் மனைவி)

இயற்பகை நாயனார் மனைவி,

இளையான்குடி மாறன் நாயனார் மனைவி,

அப்பூதியடிகள் மனைவி"

முதலான பெண்கள் இறைவனுக்கும், இறைவனுடைய அடியவர்களுக்கும் தொண்டு செய்து புகழ் பெற்றவர்கள்.

## இசைஞானியார்

"ஒழியாப் பெருமைச் சடையனார் உரிமைச் செல்வத் திருமனையார்

அழியாப் புரங்கள் எய்தழித்தார் ஆண்ட நம்பி தனைப்பயந்தார்

இழியாக் குலத்தின் இசைஞானிப் பிராட்டியாரை என்சிறுபுன்

மொழியாற் புகழ முடியுமோ முடியா தெவர்க்கும் முடியாதால்"

என்ற ஒரு பாடலில் இசைஞானியாரின் புராணத்தைக் கூறுகிறார் (Manikam, 2013).

குறைவில்லாப் பெருமையைக் கொண்ட சடையனாரின் மனைவி இசைஞானியார். எவ்விதத்தாலும் அழியாத வலிமை கொண்ட முப்புரங்களை அழித்த சிவபெருமான் ஆண்டு அருளிய சுந்தரரைப் பெற்றவருமாகிய இழிவற்ற உயர்வுடைய குலமான சிவவேதியரின் குலத்தில் வந்த இசைஞானிப் பிராட்டியாரை என் புல்லிய சொற்களால் புகழ முடியுமோ? எனக்கு முடியாமையே அன்றி வேறு எவருக்கும் முடியாது என்று சேக்கிழார் இசைஞானியாரைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

பெண்களை இழிவாகக் கருதாமல் அவர்களை உயர்ந்த நிலையில் வைத்துப் பாடியுள்ளது பெரியபுராணம்.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்று வள்ளுவர் குறிப்பிடுவார். தன் மகனைச் சான்றோன் எனப் பலரும் போற்றுவதைக் கேள்வியுறும் தாய், அவனைப் பெற்ற பொழுதிலும் பெரிதாக மகிழ்வாள். இக்குறளுக்கு இணங்க சுந்தரரைப் பெற்றெடுத்த காரணத்தால் இசைஞானியார் நாயன்மார்களுள் ஒருவராகப் போற்றப்படும் பேறினைப் பெற்றார் (Varatharasan, 1998).

அக்காலம் ஆயினும், இக்காலம் ஆயினும், இனிவரும் காலம் ஆயினும் தாய்க்கு நிகர் வேறொன்றும் இல்லை என்பதே திண்ணம். நன்மக்களைப் பெற்ற மகளிரைப் போற்றும் பண்பு தமிழ்ப் பண்பாட்டில் அன்றிலிருந்து இன்றுவரை வழக்கில் இருந்துகொண்டேதான் உள்ளது.

## காரைக்கால் அம்மையார்

தாய்மையின் மேன்மையை உணர்த்தும் பொருட்டும், பெண்களின் பக்தி நெறியை உணர்த்தும் பொருட்டும் அமைந்துள்ளது காரைக்கால் அம்மையாரின் புராணம். காரைக்காலில் தனதத்தன் என்னும் வணிகனுக்கு மகளாகப் பிறந்தவர் காரைக்கால் அம்மையார் என்றழைக்கப்படும் புனிதவதியார். இவருடைய கணவர் பரமதத்தன். புனிதவதியின் பக்தித் திறத்தை உணர்ந்தபின் அவளுடன் வாழ மறுத்தார் பரமதத்தன். இறைவன் மீது நீங்காத பற்றுடையவர். இறைவன் அருளால் மாங்கனி பெற்றவர். ஆதியும் அந்தமுமில்லாப் பரம்பொருளாகிய சிவபெருமானல் 'அம்மையே' என்று அழைக்கப்பெற்றவர். தாய்மைக்கு நிகர் தாய்மைதான் என உலகறியச் செய்ய இறைவனால் 'அம்மையே' என்று அழைக்கப்பெற்ற பெரும் புகழுக்குரியவர்.

பெண்ணைக் கடவுளைவிட மேலாக வைத்த பெருமை பெரியபுராணத்திற்கும் சேக்கிழாருக்குமே சேரும். எந்தவொரு பொருளின் மீதும், உயிரின் மீதும் அளவு கடந்த அன்பு செலுத்தும் தன்மை மகளிருக்கே அதிகம் உண்டு என்பதைக் காரைக்கால் அம்மையாரின் புராணம் மூலம் அறிய முடிகிறது. பெண் நினைத்தால் கடவுளையும் தன்னை வணங்கச் செய்ய முடியும் என்று கூறுகிறது (Manikam, 2013).

சிவாலயங்களில் காணப்படும் அறுபத்து மூன்று நாயன்மார் சிலைகளில் உள்ள நாயன்மார்களுள் ஒருவரைத் தவிர மற்ற நாயன்மார்கள் அனைவரும் கைக்கூப்பி வணங்கியபடி காட்சியளிப்பார்கள். ஆனால் காரைக்கால் அம்மையார் மட்டும் அமர்ந்த நிலையில் காட்சி தருவார். பிற நாயன்மார்கள் இறைவனைக் கடவுளாக எண்ணி வணங்குகின்றனர். எனவே அவர்கள் கைக்கூப்பிய நிலையில் காட்சி அளிக்கின்றனர். ஆனால் காரைக்கால் அம்மையார் இறைவனுக்கே தாயாய் விளங்குகிறார். மகனுக்கு முன் தாய் அமர்ந்திருத்தல் என்பது தவறில்லை. மேலும், மகன்தான் தாயை வணங்க வேண்டுமே தவிர தாய் மகனை வணங்கத் தேவையில்லை என்ற உயரிய சிந்தனையை வலியுறுத்துகிறது சைவநெறி.

இறைவனின் அருளால் பேயுரு கொண்ட கரைக்கால் அம்மையார் இறைவனைத் தரிசிக்கும் பொருட்டுக் கயிலைக்குச் சென்றார். தலையால் நடந்து சென்று இறைவனைக் காணச் சென்றார். உமையம்மை தம் உள்ளத்தில் அதிசயம் கொண்டு தம் தலைவனாகிய சிவபெருமானை நோக்கி, "தலையால் நடந்து இம்மலை மீது ஏறி வரும் ஓர் எலும்புக்கூடி பெற்ற அன்புதான் என்னே?" என்று வினவ, அதற்கு இறைவன் பதிலளித்ததை,

"வரும்இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே மற்றிப்

பெருமைசேர் வடிவம் வேண்டிப் பெற்றனள் என்று பின்றை

அருகுவந் தணைய நோக்கி அம்மையே என்னுஞ் செம்மை

ஒருமொழி உலகம் எல்லாம் உய்யவே அருளிச் செய்தார்"

என்னும் பாடல் வழி விளக்குகின்றார் (Manikam, 2013).

காரைக்கால் அம்மையைப் பற்றிக் கேட்ட உமையம்மையிடம் இறைவன், "உமையே! நீ கூறியவாறு வரும் இவள் நம்மைப் பேணும் அம்மையே ஆவாள். இந்தப் பேய் வடிவத்தை நம்மை வேண்டிப் பெற்றுக் கொண்டார்!" எனக் கூறியருளினார். அப்போது அருகில் அம்மையார் நெருங்கவே அவரைப் பார்த்து "நம் அம்மையே!" என்ற செம்மை தரும் ஒப்பற்ற ஒரு சொல்லை உலகமெல்லாம் உய்யும் பொருட்டு அருளினார்.

உலகையெல்லாம் படைத்து, அவ்வுலகைக் காக்கும் கடவுளே ஒரு பெண்ணைப் பார்த்து அம்மை என்று அழைத்ததால் புனிதவதியார் காரைக்கால் அம்மையார் எனச் சிறப்பாகக் கருதப்படுகிறார். ஒரு பெண் தாய் என்னும் நிலையை அடைந்தவுடன் அவள் மேலும் மதிக்கப்படுவது புலனாகிறது. மேலும், தாய் என்பவள் தான் பெற்ற மக்களைப் பேணிப் பாதுகாப்பவள் என்ற உயர்ந்த கருத்தினை,

"வரும்இவள் நம்மைப் பேணும் அம்மைகாண் உமையே"

என்னும் வரியில் கூறியுள்ளார் (Manikam, 2013).

## மங்கையர்க்கரசியார்

அக்காலம் முதல் இக்காலம் வரையில் வீரம் மிக்க பல மகளிர்கள் பற்றி நம் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. அவர்களுள் மங்கையர்க்கரசியும் ஒருவர். ஊரில் உள்ள அனைவரும் சமண சமயத்தைப் பின்பற்றியபோது, அதை எதிர்த்துச் சைவ சமயத்தைப் பின்பற்றிய வீரம் மிக்க பெண் மங்கையர்க்கரசியார். தான் மட்டும் சைவ சமயத்தைப் பின்பற்றுவது போதாது என்று பிறரையும் பின்பற்றச் செய்து சைவ சமயப் பயிரைத் தழைக்கச் செய்தவர். இவர் சோழ நாட்டைச் சார்ந்த இளவரசி ஆவார். இவர் நின்றசீர் நெடுமாறன் என்ற பாண்டிய மன்னனின் மனைவி ஆவார். பாண்டிய நாடு முழுவதும் சமண சமயம் பரவியிருந்தபோது சைவ சமயத்தைப் பின்பற்றிய இருவருள் இவரும் ஒருவர். எனவே மகளிர்க்கெல்லாம் அரசியாக விளங்கிய காரணத்தினால் மங்கையர்க்கரசி என அழைக்கப்பட்டார்.

"மங்கையர்க்குத் தனியரசிஎங்கள் தெய்வம்

வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி

செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்

தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை

எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளினாலே

இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்

பொங்கொளிவெண் டிருநீறு பரப்பினாரைப்

போற்றுவார் கழல் எம்மால் போற்ற லாமே"

மங்கையர்களுக்கெல்லாம் ஒப்பில்லாத அரசியும், எம் தெய்வமும் சோழரின் குலக் கொழுந்தைப் போன்றவரும், வளையலை அணிந்த மானியாரும், செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற இலக்குமியைப் போன்றவரும், பாண்டிய நாட்டை ஆளும் பாண்டியரின் குலத்துக்கு உண்டான பழியைப் போக்கிய தெய்வத் தன்மையுடைய பாவை போன்றவருமாகிய, பெரிய தமிழ்நாட்டுக்கு வந்த இடரை எங்களுடைய பெருமானாகிய சீகாழித் தலைவரின் அருளால் போக்கித் தமது பொங்கும் ஒளியைத் தரும் திருநீற்றைப் பரவச் செய்தவரைப் போற்றுபவரின் திருவரி எம்மால் போற்றப் பெறுவதாகும் என்று சேக்கிழார் பெருமானால் புகழப்படுகிறார் மங்கையர்க்கரசியார் (Kalyanasundaranar, 2010).

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா"

என்று மங்கையராய்ப் பிறப்பதற்குப் பெரிய தவம் செய்திருக்க வேண்டும் எனக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை குறிப்பிடுவார். மானி என்னும் இயற்பெயரைக் கொண்ட மங்கையர்க்கரசியாரோ மங்கையர்களுக்கெல்லாம் அரசியாகக் கருதப்படுகிறார் எனில் அவரது புகழ் அளத்தற்கரியது என்பது புலனாகின்றது. பெண்கள் நினைத்தால் ஒரு சமூகத்தையே மாற்ற முடியும் என்பது மங்கையர்க்கரசியாரின் புராணம் மூலம் புலனாகிறது.

## திலகவதியார்

திருவாமூரைச் சேர்ந்த புகழனார், மாதினியார் தம்பதியருக்குப் பிறந்தவர்கள் திலகவதியார் மற்றும் திருநாவுக்கரசர். புகழனாரும், மாதினியாரும் இறந்தபின் தன் தம்பியான நாவுக்கரசரைப் பாதுகாத்து வந்தார் திலகவதியார். திலகவதியாரைத் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்தார் கலிப்பகையார்.

“கலிப்பகையார் வீரப்போர் புரிந்து போர்க்களத்தில் மாண்டார். அச்செய்தி திலகவதியார்க்கு எட்டிற்று. அம்மையார், “என்னருமைத் தாய் தந்தையர் என்னை அவருக்கு மணம் பேசி முடிவு செய்திருந்தனர் இவ்வுயிர் அவருடையதாயிற்று ஆதலால் இவ்வுயிரை அவ்வுயிரோடு இசைவிப்பேன்” என்று துணிவு கொண்டார். அந்நிலையில் மருணீக்கியார், அம்மையாரை வணங்கி, “நம் தாய் தந்தையர் சிவலோகம் அடைந்த நாள்தொட்டு, உம்மையே அவராகக் கருதி வாழ்ந்து வருகிறேன் என்னைத் தனியாக விடுத்துச் செல்லத் துணிவீராயின், முதலில் என் உயிரை விடுகிறேன்” என்று புலம்பினார். திலகவதியார் “தம்பியார் உலகில் வாழ்தல் வேண்டும்” என்னும் தயா உடையரானார். அதனால் அம்மையார், பொன் மணி நூல் பூணாது, அனைத்துயிர்க்கும் அருள் பூண்டு, இல்லத்திலேயே தவம் புரியலானார். மருணீக்கியார் துயரொழிந்தார் (Manikam, 2013).”

“தம்பியார் உளராக வேண்டும் எனவைத்த தயா

உம்பருல கணையவுறு நிலைவிலக்க உயிர்தாங்கி

அம்பொன்மணி நூல்தாங்கா தனைத்துயிர்க்கும் அருள்தாங்கி

இம்பர்மனைத் தவம்புரிந்து திலகவதி யாரிருந்தார்”

தன் தம்பி உயிர் வாழ வேண்டும் என்பதற்காக, ‘தேவர் உலகம் செல்லும் துணிவு கொண்ட நிலையை விலக்கி, உயிரைத் தாங்குவாராகி அழகிய பொன்னும் மணியும் உடைய நாண் பூணுதலை விடுத்து, எல்லா உயிர்களுக்கும் அருளைத் தாங்கி நின்று இவ்வுலகத்தில் மனையில் இருந்து தவத்தைச் செய்து கொண்டு திலகவதியார் இருந்தார். தன்னுடைய குடும்பத்தினருக்காகத் தன்னுடைய வாழ்க்கையையே மாற்றி அமைத்துக் கொள்கின்ற பெண்கள் அக்காலம் முதல் இன்று வரை இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள் (Manikam, 2013).

இதேபோல் பல பெண்கள் பற்றி பெரியபுராணம் கூறுகின்றது. ஆய்வின் எல்லை கருதி மேற்கண்ட மகளிர் பற்றி மட்டும் கூறப்பட்டுள்ளது.

## முடிவுரை

“பெண்கள் நாட்டின் கண்கள்” என்று கூறுவர். அவ்வகையில் மகளிர் அனைத்து நிலைகளிலும் போற்றுதலுக்குரியவர்களாகவே உள்ளனர். பெண்கள் ஒடுக்கப்படுவது அன்று முதல் இன்று வரை ஆங்காங்கு காணப்படுகிறது. எனினும் பெண்களைப் போற்றும் சமூகம் தான் பெரும்பாலும் உள்ளது. பெரியபுராணத்தில் மகளிர்நிலை சிறப்பாகவே உள்ளது. இன்று காலம் மாறினாலும் தாய்மைப் பண்பு கொண்ட மகளிர் போற்றுதலுக்கு உரியவர்களாகவே உள்ளனர். பெரியபுராணத்தில் கூறப்பட்டுள்ள பெண்கள் அனைவரும் சிறப்புக்குரியவர்களாகவே உள்ளணர். இதேபோல் அனைத்துப் பெண்களும் போற்றப்பட வேண்டும்.

## References

Kalyanasundaranar, T.V. (2010) Nayanmaar Varalaaru, Saradha Pathippagam, Chennai, India.

Manikam, (2013) Periyapuranam, Periyar suyamariyathai veeliyeedu, Chennai, India.

Varatharasan, M. (1998) Thirukkural Thalivurai, The south India Saiva Siddhanda Works Publishing Society, Thirunelveli, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License